தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆனி 9, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஜூன் 23, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.”

ஒழுக்கம் எல்லோருக்கும் உயர்வைத் தரும். அதனால், அந்த ஒழுக்கத்தை உயிரைக் காட்டிலும் சிறந்ததாக போற்றி காக்கவேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண்கள் 1, 2, 3 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

துணை மின் நிலையம்

***572—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2016 ஜூன் 23

திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலுள்ள திடீர் குப்பம், புதுமல்லவாடி பகுதியில், மல்லவாடி 33/11 K.V. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தச் சட்டமன்றத்தில் மூன்றாவது முறையாகப் பேசுவதற்கு வாய்ப்பை வழங்கி, இரண்டு முறை அமைச்சராக இருக்க வாய்ப்பை வழங்கி, இன்றையதினம் மின் துறை அமைச்சர் என்ற முறையில் முதல் கேள்விக்குப் பதில் சொல்கின்ற வாய்ப்பை வழங்கிய எங்கள் குடும்ப தெய்வம், என்றென்றும் நாங்கள் வழிபடுகின்ற இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், திடீர் குப்பம், புதுமல்லவாடி பகுதிக்கு அருகில் ஏற்கெனவே மல்லவாடி 33/11 K.V. துணை மின் நிலையம் உள்ளது. தற்போது, அந்தத் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது உச்சபட்ச மின் தேவை எவ்வளவோ அந்த அளவிற்கு போதிய திறனுள்ள துணை மின் நிலையம் இருக்கின்ற காரணத்தினால், புதிய மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. தேவை இருப்பின், வருங்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலுள்ள திடீர் குப்பம், மல்லவாடியில் 33/11 K.V. துணை மின் நிலையம் உள்ளது. இம்மின் நிலையம் கடந்த 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நிலையத்திற்கு 1 x 8 M.V.A. power transformer உள்ளது. குறைந்த மின் அழுத்தம்

2016 ஜூன் 23]

காரணமாகக் கூடுதலாக 1 x 8 M.V.A. power transformer தேவைப்படுகிறது. குறைந்த மின் அழுத்தத்தால், விவசாயிகளுடைய மின் மோட்டார்களின் coil பழுதாகி, அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற நிலையை மாற்றுவதற்குக் கூடுதலாக 1 x 8 M.V.A. power transformer அமைக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லவாடி 33/11 K.V. துணை மின் நிலையத்தில் அமைந்துள்ள மின் மாற்றியின் திறன் 1 x 8 M.V.A. இப்பொழுது உச்சபட்சத் தேவை 7.658 அளவு மட்டும்தான் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் பகுதியில் மின் நுகர்வு வளர்ச்சி என்பது மிகவும் குறைவாக இருக்கின்றது. அதாவது 0.01 சதவிகித அளவிற்கு, ஏற்கெனவே நிறுவப்பட்டதில் குறைவாகத்தான் இருக்கின்றது. எனவே, 1 x 8 M.V.A. திறன் கொண்ட மின் மாற்றி ஐந்து வருடங்களுக்குப் போதுமானதாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் தேவை இருக்கும் என்று சொன்னால், கூடுதலாக ஒரு 8 M.V.A. திறன்கொண்ட மின் மாற்றி அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுமல்லவாடி, பழையமல்லவாடி, துரிஞ்சாபுரம், வடகரிம்பலூர், உசம்பாடி, சீலப்பந்தல், கொளக்கரவாடி, கருந்துவம்பாடி உள்ளிட்ட பத்து ஊர்களில் இரண்டாயிரம் மின் மோட்டார் பம்புகள் இருக்கின்றன. மின்சாரம் சரியாகக் கிடைக்காத காரணத்தினால், மோட்டார்களின் coil–கள் பழுதடைந்து விடுகின்றன. கிராமங்களில் உள்ள விளக்குகள் சரியாக எரியாமல் இருக்கின்றன. இன்றைக்கு, தமிழ்நாடு மின் மிகை மாநிலம் என நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். பல விவசாயிகள், பல நாட்களாக இலவச

மின்சாரம் பெற, காத்திருப்போர் பட்டியலில் காத்துக் கிடக்கிறார்கள். என் தொகுதி, விவசாயம் சார்ந்த தொகுதியாக இருக்கிறது. எனவே, இந்த மின்மாற்றி அமைத்து அவர்களுக்கும் மின்சார இணைப்பு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது தமிழ்நாடு மின் மிகை மாநிலம் என அறிவித்திருக்கின்றீர்கள் என்று சொன்னார்கள். கடந்த காலம் மற்றும் இப்போதுள்ள நிலை, அதாவது எப்போதுமே மின் வெட்டு இல்லாமல் இருக்கின்றது என்பதை அவரே உணர்ந்து கொண்டிருப்பார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நேற்றையதினம் எவ்வளவு விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை நான் சொல்லியிருக்கின்றேன். ஏற்கெனவே சொன்னதுபோல, தேவையிருப்பின் உடனடியாக 8 M.V.A. திறன்கொண்ட மின் மாற்றி அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். வாய்ப்பு இருக்கிறது, தருகிறேன். உட்காருங்கள். நான் அழைக்கின்றேன், உட்காருங்கள். சில வரிசையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டியுள்ளது. கொஞ்சம் உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருவேன். நிறைய கேள்விகள் எடுத்துக்கொள்ளலாம். இன்னும் நேரமிருக்கிறது (குறுக்கீடு). வரவு—செலவுத் திட்டக் கூட்டத் தொடர் வருகிறது, அப்போது எடுத்துக்கொள்ளலாம். நிறைய கேள்விகளுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.